களஞ்சியம் - சர்வதேச தமிழ் ஆய்விதழ்
KALANJIYAM International Journal of Tamil Studies

# உவா நாள்

*ந.தமிழரசி, முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி, பாரதியார் பல்கலைக்கழகம், கோவை*

*முனைவர் ஆ.மகாலட்சுமி, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி, பாரதியார் பல்கலைக்கழகம், கோவை.*

**ஆய்வுச்சுருக்கம்**

மனிதன் இயற்கையை நேசித்து அதனோடு ஒட்டி வாழ்ந்த காலமே சங்க இலக்கியக் காலமாகும். சங்கப் புலவர்கள் உலகத்தின் தோற்றத்தையும், அதன் இயக்கத்தையும் கூறும் அறிவுடையவர்களாகத் திகழ்ந்தனர். சிறந்த வானியலறிவும் கோள்கள் பற்றிய அறிவும் கொண்டிருந்தனர். ஐம்பூதங்களின் சேர்க்கையே உலகம் என்றும் அவற்றை இறையாக எண்ணி வழிபட்டும் வந்தனர். இதில் திங்கள் வழிபாடான உவா நாளும் ஒன்று. திங்களைப் பாடாத இலக்கியங்களோ புலவர்களோ இல்லையென்று கூறலாம். திங்களைக் குழந்தையாக, கடவுளாக, தூது செல்லும் பொருளாக எனப் பலவாறு போற்றிப் பாடியுள்ளனர். பண்டைய தமிழர்கள் தாங்கள் வாழும் இருப்பிடங்களில்

நிலா முற்றம் அமைத்து நிலவின் பயனைப் பெற்றனர். திங்களானது மனிதர்களின் மனதோடு தொடர்புடையதாகக் கூறப்படுகிறது. இந்த வழிபாடானது மக்கள் அறுவடை நாள் முடிந்து ஓய்வு எடுக்கும் போது கொண்டாடப்படுவதாக அமைந்தது. சித்திரை மாதம் தொடங்கி பங்குனி மாதம் வரை வரும் அனைத்து பௌர்ணமி நாட்களும் இறைவனுக்கு உகந்த நாளாகக் கருதி வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன. ஏதேனும் ஒரு வகையில் இயற்கை வழிபாடும், விழாக்களும் இன்று வரை மக்களால் கொண்டாடப்பட்டு வருகிறது. மருத நிலத்தில் இந்திர வழிபாடாக இருந்து பின்பு ஆரியர்களின் கலப்பால் நெய்தல் நில வழிபாடாக மாறியது. இவ்வழிபாட்டின் நோக்கமானது நிலவைப் போற்றி வணங்குவதும் இயற்கையைப் பாதுகாப்பதுமே ஆகும். பண்டைய தமிழர் நிலவின் ஒவ்வொரு வடிவத்தையும் கண்டு கடவுளாகப் போற்றி வழிபட்டனர். சங்க இலக்கியப் பாடல்களில் பெண்கள் பிறை கண்டு தொழுததற்கான சான்றாதாரங்கள் உள்ளன. திங்கள் வழிபாடு என்பது குறிப்பிட்ட மதத்தவருக்கோ இனத்தவருக்கோ இல்லாமல் அனைத்து மக்களுக்குமான பொது வழிபாடாக இன்றுவரை அமைந்துள்ளது என்பது மிகச் சிறப்பாகும். உவா எனும் சொல்லானது முழுமதி நாளைக் குறித்தது. முழுமதி நாளுக்கு முன் உள்ள நிலைகளைப் பிறை என்ற சொல்லால் வழங்கினர். தற்போது இந்த இரண்டையும் விடுத்து பௌர்ணமி, அமாவாசை என்ற சொல்லானது புழக்கத்தில் உள்ளது. உவா நாள் என்ற வார்த்தையை தற்போது மலையாளத்தில் மட்டுமே பயன்படுத்தி வருகின்றனர். கருத்த உவா என்பது அமாவாசையாகவும்,

வெளுத்த உவா என்பது பௌர்ணமியாகவும் மலையாள மொழியில் குறிப்பிடப்படுகிறது. அவ்வகையில் உவா என்ற சொல் பற்றியும் அச்சொல்லை பயன்படுத்திய சூழலைப் பற்றியும், உவா நாளின் சிறப்புப் பற்றியும் இக்கட்டுரையில் ஆராயப்பட உள்ளது.

**திறவுச் சொற்கள்**

உவா, பௌரணை, மதி, பஞ்சாங்கம், நெய்தல், காருவா வெள்ளுவா

**முன்னுரை**

பண்டைய காலம் முதல் தற்காலம் வரை மக்கள் தங்கள் வாழ்வில் கோள்களுக்குச் சிறப்பிடம் கொடுத்து வந்துள்ளனர். கோள்களானது தங்களின் வாழ்வில் தாக்கத்தை ஏற்படுத்துவதாகவும் அவர்கள் நம்பினர். கோள்களில் ஒன்றான சந்திரன் சூரியனிடமிருந்து ஒளியைப் பெற்று அவ்வொளியை மக்களுக்கு குளிர்ச்சியாக மாற்றி தரும் சிறப்புடையது. அத்தகைய சந்திரனின் முழுநிலவு நாளானது சங்ககாலம் முதல் சிறப்புப் பெற்று வந்துள்ளது.

**உவா - பொருள்**

உவா என்னும் சொல்லுக்கு *பௌரணை* (பிங்கல நிகண்டு.3209) என்றும், *முழுமதி நாள், வெள்ளுவா, காருவா, அமாவாசை* (மெய்யப்பன் தமிழ் அகராதி.ப.22) என்றும், *உவவுமதி - பூரண சந்திரன், உவா - அமாவாசி, உவவு - பூரணை, அமாவாசை* என்றும் (மதுரைத் தமிழ்ப் பேரகராதி. ப.364) பொருள் கூறுகிறது. மேலும் பழந்தமிழ் இலக்கியங்கள்

அமாவாசை, பௌர்ணமி என்னும் இரண்டு நாட்களையும் உவா என்ற பெயரால் குறிப்பிடுவதைக் (வாழ்வியல் களஞ்சியம்.ப.414) காணமுடிகிறது. இதில் அமாவாசை என்பது மதிமறையும் நாளாகவும் பௌர்ணமி என்பது முழுமதி நாளாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது புலனாகிறது.

**வானியல் புலமை**

தமிழர்கள் இலக்கியங்கள் மட்டும் இன்றி வானியல் அறிவிலும் சிறப்பு பெற்றிருந்தனர். சூரியன், சந்திரன் போன்ற கோள்கள் பற்றிய பரந்த அறிவுடையவர்களாகத் திகழ்ந்தனர். சந்திரனைச் சூழ்ந்து விண்மீன்கள் வருவது பூனையுடன் அதன் குட்டிகள் வருவது போல் உள்ளதாக,

**“எழுதி யன்ன கொடிபடு வெருகின்**

**பூளை அன்ன பொங்குமயிர்ப் பிள்ளை**

**மதிசூழ் மீனின், தாய்பவழிப் படூஉம்” (அகநானூறு.பா.297)**

மதுரை மருதன் இளநாகனார் சிறப்பிக்கிறார். மேலும் தமிழர்கள் சோதிடத்திலும் புலமை பெற்று விளங்கினர். சோதிடத்தில் இடம்பெற்றுள்ள *‘பஞ்சாங்கம் என்பது நட்சத்திரம், திதி, வாரம், யோகம், கரணம் என்ற ஐந்து உறுப்புகளை உடையது;* (வாழ்வியல் களஞ்சியம்.ப.414) சங்ககால மக்கள் தங்கள் வாழ்வை இருபத்தேழு நட்சத்திரங்களுடன் தொடர்புபடுத்திக் கொண்டனர். நட்சத்திரங்களில்

ஒன்றான ரோகிணி தனது கணவன் சந்திரனுடன் இணைந்து மகிழ்ந்திருந்ததை,

**“முரண் மிகு சிறப்பின் செல்வனோடு நிலைஇய**

**உரோகிணி நினைவனள் நோக்கி”** (நெடுநல்வாடை.165)

என்ற வரிகள் குறிப்பிடுகிறது. இவ்வாறாக தமிழர்கள் வானியல் அறிவும், சோதிட அறிவும் பெற்றிருந்தது புலனாகிறது.

**காருவா**

பஞ்சாங்கத்தில் இடம்பெற்றுள்ள திதி என்ற உறுப்பைக் கொண்டு அமாவாசை மற்றும் பௌர்ணமியானது கணக்கிடப்படுகிறது.‘*பிரதமை முதலாகத் தொடங்கப்படும் திதிகள் பதினான்குடன், பதினைந்தாவதாக முழுமதி நாளைச் சேர்த்து சுக்கில பட்சமாக் கூறப்படுகிறது. இந்த வளர்பிறை நாட்களை முற்பக்கம் என்பர். பின்னர் வரும் பதினான்கு நாட்களுடன் அமாவாசை சேர்த்து கிருஷ்ணபட்சமாக் கூறப்படுகிறது. இதுவே தேய்பிறை அல்லது பிறபக்கம் எனக் கூறப்படுகிறது*’ (மேலது) தற்காலத்தில் அமாவாசையன்று இறந்தோருக்குத் திதி கொடுப்பதும், நோன்பு இருப்பதும் முக்கியக் கடமையாகவே செய்யப்பட்டு வருவதைக் காணமுடிகிறது. இதில் ஆடி அமாவாசை மற்றும் தை அமாவாசை நாட்கள் முன்னோர்களுக்கான வழிபாட்டு நாட்களாகவே அமைந்துள்ளதை அறியமுடிகிறது.

**பிறை நாள்**

காருவா முடிந்த நாளிலிருந்து வளர்பிறையானது தொடங்குகிறது. அப்பிறையை நோக்கி மக்கள் தொழுது வணங்கினர். வளையை உடைத்தாற்போன்ற உருவத்தோடு செவ்வானத்தில் பிறைச் சந்திரன் தோன்றியது. அதைப் பலரும் தொழுததை,

“**வளையுடைத் தனைய தாகிப் பலர் தொழ**”. (**குறுந்தொகை.பா.**307)

என்ற வரிகள் குறிப்பிடுகிறது. மேலும் அத்தகையப் பிறைச் சந்திரனை சிவபெருமான் தன் முடியில் சூடியுள்ளதையும், தேவர்கள் முதலான பதினெண் கணங்களால் போற்றப்படுவதையும்,

“**பிறை நுதல் வண்ணம் ஆகின்று அப்பிறை**

**பதினெண் கணனும் ஏத்தவும் படுமே** (**புறநானூறு.பா.**1)

என்ற புறநானூற்று வரிகள் புலப்படுத்துகிறது. நல்லோரை வாழ்த்தும் போது அவர்களின் புகழ் வளர்பிறை போல் வளர வேண்டும் என்று வாழ்த்துவர். அவ்வாறே பாண்டிய மன்னனின் அரசும் வளர வேண்டும் என்று வாழ்த்துவதாக

“**குடமுதல் தோன்றிய தொன்றுதொழு பிறையின்**

**வழிவழிச் சிறக்க நின் வலம்படு கொற்றம்** (**மதுரைக்காஞ்சி**-193)

என்ற வரிகளில் மாங்குடி மருதனார் சிறப்பிக்கிறார். இவ்வாறு வளர்பிறையானது நாள்தோறும் வளரும் தன்மை கொண்டதாக

அமைந்துள்ளது. அப்பிறையினை சிவபெருமான் தனது முடியில் சூடிச் சிறப்பித்துள்ளதும் புலனாகிறது.

**உவவுமதி நாள்**

முழுமதி நாளானது இறைவழிபாட்டை மேற்கொள்வதற்கான நாளாகவே அமைந்துள்ளது. பரதவர்கள் வெண்கூதாள மலரால் ஆன மாலையை அணிந்து சுறா மீன்க் கொம்பை நட்டு முழு நிலவு நாளில் வணங்கினர் என்பதை,

**“வெண் கூதாளத்துத் தண்பூங் கோதையர்**

**சினைச் சுறவின் கோடு நட்டு.....**

**உவவு மடிந்து உண்டு ஆடியும்” (பட்டினப்பாலை.85-93)**

என்ற வரிகளில் கடியலூர் உருத்திரங்கண்ணனார் குறிப்பிடுகிறார். மேலும் உவாநாளில் நெய்தல் நிலத்து மக்கள் கடல் தெய்வமாகிய வருணனை வழிபட்டனர் என்றும், அம்மாலை நேரத்தில் கடல் பொங்கி பேரொலி உண்டாகும் என்பதையும்,

**“உருகெழு பெருங்கடல் உவவுக் கிளர்ந்தாங்கு” (அகநானூறு.பா.201)**

என்ற பாடலில் மாமூலனார் புலப்படுத்துகிறார். இவ்வாறாக கோள்களின் மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகளிலிருந்து மக்கள் தங்களைக் காத்துக் கொள்ள அந்நாட்களை இறை வழிபாட்டு நாட்களாக மாற்றிக் கொண்டனர் என்பது தெளிவாகிறது.

**சித்திரை உவவுமதி**

சித்திரை மாதத்தில் நிகழும் பௌர்ணமி ஆனது மிகச் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. சித்திரைத் திங்கள் சித்திரை நட்சத்திரத்தில் நிறைமதி சேர்ந்து வரும் சித்ராப் பௌர்ணமி நாளில் நாளங்காடி பூதத்திற்கு படையெடுத்து வழங்கியதை,

**"கொடுப்போர் ஓதையும் கொள்வோர் ஓதையும்**

**நடுக்கின்றி நிலைஇய நாளங் காடியில்**

**சித்திரைச் சித்திரைத் திங்கள் சேர்ந்தன (இந்திர.காதை.64)**

என்று இளங்கோவடிகள் சிறப்பிக்கிறார். இந்த சித்திரை முழுநிலவு நாளானது உலகெங்கும் புத்தபூர்ணிமா எனவும், 1965 இல் சிலம்பொலி செல்லப்பனார் மற்றும் தி.மு.காளியண்ணன் முயற்சியினால் திருச்செங்கோட்டில் சிலப்பதிகாரவிழா அதாவது கண்ணகி விழாவாகவும், தமிழ்நாட்டில் சித்திரைத் திருவிழாவாகவும் கொண்டாடப்பகிறது. (http://nganesan.blogspot.com/2021/05/tiger-durga-indus-cilappatikaram.html) ஆனால் தற்போது சித்ராப் பௌர்ணமி விழாவானது சித்திரகுப்தரை வழிபடும் நாளாக மாறியுள்ளதைக் காணமுடிகிறது. இவ்வாறாக காலந்தோறும் வழிபடும் முறைகளும் வழிபடு கடவுள்களும் மாறி வருவது தெளிவாகிறது.

**மார்கழி உவவுமதி**

மார்கழி மாதத்தில் தோன்றும் முழுநிலவு நாளானது திருவாதிரை நட்சத்திரத்தோடு கூடிய நாளாகும். இந்நாளில் சிவபெருமானுக்கு விழா கொண்டாடப்படுகிறது.. கடல் நடுவே உள்ள படகில் ஏற்றி வைத்த விளக்குகளை போல் மார்கழியில் மின்னும் நட்சத்திரம் கண்டும் முழுமதி கண்டும் மயில்கள் போல் விறலி ஆடியதை,

**“முந்நீர் நாப்பண் திமில் சுடர் போல**

**செம்மீன் இமைக்கும் மாக விசும்பின்**

**உச்சி நின்ற உவவு மதி கண்டு” (புறநானூறு.பா.60)**

என்று உறையூர் மருத்துவன் தாமோதரனார் கூறுகிறார். இதன் வாயிலாக திருவாதிரை நட்சத்திரம் தோன்றும் நாளானது விழாவாக கொண்டாடப்பட்டதை அறிய முடிகிறது.

**கார்த்திகை நிறைமதி**

கார்த்திகை மாதத்தில் தோன்றும் முழுமதி தொழுவதற்கு அரிதானது என்பதை,

**“தொழுதுகாண் பிறையிற் தோன்றி” (குறுந்தொகை.178)**

என்ற பாடல் புலப்படுத்துகிறது. மேலும் மணமாகாத பெண்கள் கார்த்திகை மாதத்தில் பிறை வழிபாடு செய்ததை இப்பாடலில் நெடும்பல்லியத்தையார் குறிப்பிடுகிறார். இவ்வாறாக சந்திரனின் பிறை

தேய்வதையும் வளருவதையும் வழிபாட்டு நாட்களாகக் கொண்டு கோள்களின் தாக்கத்திலிருந்து மக்கள் தங்களைக் காத்து வந்தனர்.

## முடிவுரை

உவா நாள் என்ற சொல்லானது அமாவாசை, பௌர்ணமி என்ற இரு நிகழ்வுகளைக் குறிப்பிடுகிறது. அதில் முழுநிலவு நாளை சிறப்பாக எண்ணி மக்கள் வழிபட்டு வந்தது புலனாகிறது. பழந்தமிழர்கள் சிறந்த வானியல் அறிவு கொண்டு வாழ்ந்து வந்ததை உணர முடிகிறது. இயற்கையாக நிகழும் கோள்களின் மாற்றங்களை உணர்ந்து அவற்றை கடவுளாக எண்ணி வழிபட்ட நிலையைக் காணமுடிகிறது.

### துணை நின்ற நூல்கள்

1.சுப்பிரமணியன்,ச.வே,முனைவர்.(ப.ஆ).மெய்யப்பன் தமிழ் அகராதி, மணிவாசகர் பதிப்பகம், சென்னை- 600 108, இரண்டாம் பதிப்பு -2009.

2.செயபால், இரா,முனைவர். (உ.ஆ) அகநானூறு மூலமும் உரையும் இரண்டாம் பகுதி, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை - 600098, நான்காம் பதிப்பு -2013.

3.துரை இராசாராம் புலவர், முனைவர், (உ.ஆ), குறுந்தொகை தெளிவுரை, திருமகள் நிலையம், சென்னை 600 017, மூன்றாம் பதிப்பு - 2011.

4.நாகராஜன்,வி,முனைவர்.(உ.ஆ), பத்துப்பாட்டு இரண்டாம் பகுதி மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை - 600 098, முதற்பதிப்பு - 2004.

5.பாலசுப்பிரமணியன்,கு,வெ.(உ.ஆ) புறநானூறு மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை- 600 098, முதற்பதிப்பு -2004.

6.மதுரைத் தமிழ்ப் பேரகராதி முதல் பாகம், சந்தியா பதிப்பகம், சென்னை - 600 083, முதற்பதிப்பு - 2004.

7.வாழ்வியல் களஞ்சியம்- தொகுதி ஒன்று, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், இரண்டாம் பதிப்பு - 1991.

8.ஸ்ரீசந்திரன்.ஜெ. சிலப்பதிகாரம் மூலமும் உரையும்,வர்த்தமானர் பதிப்பகம், சென்னை -600 017, நான்காம் பதிப்பு - 1996.